Registered as a Newspaper

பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 07 (20-01-1994) வியாழக்கிழமை ஓசை 336

## குழந்தைகள் போசாக்கின்மை யாழ். மாநகரபிரதேசத்தில் அதிகரிப்பு

யாழ். மாநகர சபை பிரதேசத்தில் குழந்தைகள் மத்தியில் போசாக்கின்மை அதிகரித்து வருவதாக அண்மையில் மாநகர சபையின் தாய்சேய் பகுதியினர் எடுத்த புள்ளிவிபரங்களிலிருந்து தெரியவருகிறது. தொடர்ச்சியாக போசாக்கின்மை வீதம் வருடாந்தம் அதிகரித்து வருவதுடன் வயது அதிகரித்துச் செல்லும்போது போசாக்கின்மை வீதம் அதிகமாக காணப்படுகின்றது. சென்ற ஆண்டு எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்களின் படி குழந்தைகளின் 44 வீதத்தினர் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பிறந்ததில் இருந்து ஒரு வயது வரையான பிள்ளைகளில் 8வீதத்தினரும், ஒரு வயது முதல் இரண்டு வயது (4ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி முகாமிலிருந்து பீரங்கித் தாக்குதல்

### ஏழு பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி சிறிலங்கா இராணுவக் காவலரண்களிலிருந்து கட்டுவன், ஏழாலை பகுதிகளைநோக்கிநடாத்திய எறிகணைத்தாக்குதல் மற்றும் பீரங்கித் தாக்குதலில் ஒரே வீட்டில் குடியிருந்த ஆறுபேர் உட்பட ஏழுபேர் காயமடைந்தனர். மாலை 5-00 மணி முதல் பரவலாக இத் தாக்குதல் நடாத்தப்பட்டவண்ணம் இருந்தது.

இரவு 7மணியளவில் இடம்பெற்ற தாக்குதலினால் மயிலணி வடக்கு, சுன்னாகத்தைச்சேர்ந்த சின்னத்துரை பூமகள் (46), சின்னத்துரை ஜெயந்தி (20), கதிரவேலு றசந்தன் (06), தர்மகுலசிங்கம் ராசாத்தி (35), இளையகுட்டி ராஜதேவி (30), சற்குணம் தயாளினி ஆகியோர் காயமடைந்தனர், இவர்களி (4ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவம் பயன்படுத்தும் பஸ்ஸினுள் குண்டு வெடிப்பு!

## 15 பேர் பலி; 40 பேர் படுகாயம்

### றம்பாவ சந்திக்கருகில் சம்பவம்

(கொழும்பு)

புல்மோட்டையிலிருந்து அநுராதபுரம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த இராணுவத்தினர் பயன்படுத்தும் தனியார் பஸ்வண்டியொன்றினுள் குண்டு ஒன்று வெடித்ததில் 15 பேர் பலியாகினர். மேலும் 40பேர் காயமடைந்தனர். இந்த பஸ்வண்டி அதிகாலை 6.00 மணிக்கு புறப்பட்டு காலை 9.25 மணியளவில் றம்பாவ சந்தியை நெருங்கிக்கொண்டிருந்த வேளையில் பஸ்ஸின் நடுப்பகுதியிலுள்ள ஆசனம் ஒன்றின் கீழ் மறைத்துவைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த பஸ்வண்டியில் பலாலி, வசாவிளான் முகாமைச் சேர்ந்த படையினர் சிலரும் பயணம் செய்துள்ளனர் எனவும் அறியவருகின்றது.

இந்த பஸ்ஸில் 60பேர்பயணம் செய்ததாகவும் இவர்களில் 15பேர் பலியானதாகவும் 40பேர் காயமடைந்ததாகவும் பி.பி.ஸிவானொலி தெரிவித்தது.

நேற்றுக் காலை 60-2267 இலக்கமுடைய இந்த டாட்டா ரக பஸ் புல்மோட்டை 7ஆம் கட்டையிலிருந்து 6.00 மணிக்கு புறப்பட்டது. மதவாச்சி ஊடாக அநுராதபுரம் நோக்கி வந்து கொண்டிருந்தது. காலை 9.25 மணியளவில் றம்பாவ பொலிஸ் காவல் நிலையமருகே வந்தபோது மறைத்து வைக்கப்பட்...

கடைகளுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டது. சம்பவம் நடைபெற்ற இடத்தில் வீதியில் இரத்தம் திட்டுத்திட்டாகக் காணப்பட்டது. அரச இரசாயன பகுப்பாய்வாளர் சம்பவ இடம் சென்று விசாரணை நடத்தி வருகின்றார். இராணுவத் தளபதியும் அங்கு விரைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதே சமயம் காயமடைந்தவர்களுக்கு அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

குண்டு வெடிப்புக்கு உள்ளான பஸ்வண்டி

காட்டுப்போர், இரவுப் போருக்குப் பயிற்சி

## இராணுவ நடவடிக்கைக்கான சில மூல உபாயங்கள் தயாராகிவிட்டன!

### இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா பேட்டி

(கொழும்பு)

''எமது இராணுவநடவடிக்கைகள் இரண்டு வழிமுறைகளைக் கொண்டது. நாம் குறுகியகால மற்றும் நீண்டகால இராணுவத் திட்டங்களை கொண்டுள்ளோம். குறுகியகால திட்டமானது உடனடித் தாக்குதல் நடவடிக்கையாகும். நீண்டகாலத் திட்டமானது அரசியல்வாதிகளுடன் கலந்துபேசி மேற்கொள்ளப்படும். சில மூலோபாயத்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இதற்கு பெருமளவு ஆயுதங்களும் வெடிமருந்துகளும் வாகனங்களும் தேவை என்பதை ஒப்புக்கொள்கிறேன்' இவ்வாறு புதிய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா தெரிவித்துள்ளார்.

சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். 'நாம் எமது திட்டங்களை வகுத்துள்ளோம் அவை குறித்து பாதுகாப்பு அமைச்சுடனும் கலந்தாலோசித்துள்ளோம். விபரங்களை பாதுகாப்புக் கருதி என்னால் வெளியிட முடியாது. நான் தளபதியாக பதவி ஏற்பதற்கு முன்பாகவே பூநகரி அழிவை அடுத்து இத் திட்டங்கள் குறித்து தொடரான கலந்தாலோசனைகளை நடத்தியுள்ளேன். கள அதிகாரிகளை சந்தித்து கள நிலைகள் குறித்தும் அவர்களது எண்ணங்கள் குறித்தும் கேட்டறிந்துள்ளேன் எனவும் ஜெரி டி சில்வா அப் பேட்டியில் குறிப்பிட்டார்.

இராணுவத்தினருக்கு பயிற்சியளிக்கும் காலம் இப்போது நீடிக்கப்பட்டுள்ளது. எனினும் சில காரணங்களுக்காக அக் காலப்பகுதி எவ்வளவு என்பதை என்னால் கூறமுடியாது. காட்டுப் போர், மற்றும் இரவுநேரப் போரிற்கான பயிற்சிகள் அளிக்கப்படும். எல்லா பட்டாலியன்களுக்கும் பல்வேறு விதமான பயிற்சிகள் அளிக்கப்படும்.

மக்கள் உடனடித்தீர்வை எதிர்பார்க்கின்றனர். ஆனால் இதற்கு காலம் எடுக்கும். வியட்நாமையோ அல்லது சிறிலங்காவில் இந்திய அமைதிப்படையின் பிரசன்னத்தையோ உதாரணத்திற்கு எடுத்துப்பாருங்கள். எமது இலக்கை விரைவில் அடையவே (4ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினரின் தேவைக்கு பயன்படுவதைக் கண்டுள்ளேன்

### பிரதேச சபை அதிகாரி தகவல்

(கொழும்பு)

## படை அதிகாரியின் மனைவியை தாக்க...

# படை அதிகாரியின் மனைவியை தாக்க இறந்தசிப்பாய்களின்உறவினர்முயற்சி

## பூநகரி விசாரணைக்குழு அறிக்கையின் எதிரொலி

பூநகரி கூட்டுத்தளச் சண்டையில் உயிரிழந்த இராணுவச் சிப்பாய்க்ளின் உறவினர் பூநகரி இராணுவ முகாமில் கடமையாற்றிய ஓர் உயர் இராணுவ அதிகாரியின் மனைவியைத் தாக்க முயற்சித்தாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரியின் மனைவி அனுராதபுரத்தில் ஒரு பள்ளிக்கூட ஆசிரியையாகக் கடமையாற்றுகிறார். பள்ளிக்கூடத்துக்குள் இறந்த சிப்பாய்களின் உறவினர் நுழைந்து குழப்பம்விளைவித்ததால்பள்ளிக்கூடம் சிறிதுநேரம் இயங்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. பூநகரியில் ஏற்பட்ட இராணுவ இழப்புகளுக்கு உயர் இராணுவ அதிகாரிகள்தான் காரணம் என்று பத்திரிகை அறிக்கைகள் வெளிவந்ததை அடுத்தே இந்தச் சம்பவம் நடைபெற்றது.

## ஹெலி தாக்குதல்

பூநகரி கல்முனை கடற்பரப்பில் சிறிலங்கா விமானப்படை உலங்குவானூர்தி ஒன்று கலிபர் தாக்குதலை நடாத்தியது. நேற்றிரவு8-45 மணியளவில் இப் பகுதிக்கு வந்த உலங்குவானூர்தி பரா வெளிச்சம் பாய்ச்சியபின் இத் தாக்குதலை நடாத்தியது.

இத் தாக்குதலால் தொழிலுக்குச்சென்ற மீனவர்கள் அவசரமாககரைதிரும்பினர்.

# கொழும்புக்கடலில் படகுப்பயணத்திற்கு தடை

## புலிகளின் தாக்குதல் குறித்து அச்சம்

(கொழும்பு)

கொழும்புக் கடலில் படகுகள் பயணம் செய்வதை ஜனாதிபதி தனது புதிய சட்டம் மூலம் தடை செய்துள்ளார். நேற்று முன்தினமிரவு முதல் இத் தடை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் இல்லம், அலுவலகம், இராணுவம், மற்றும் கடற்படை தலைமையகங்கள் கடலை அண்டி இருப்பதால் புலிகள் கடல் மூலம் வந்து தாக்குதல் நடத்தலாம் என அரசு அஞ்சுவதால் இந் நடவடிக்கை என தெரிவிக்கப்படுகிறது.

# மட்டு. கண்ணி வெடியில் இரு பொலிசார் பலி

(கொழும்பு)

மட்டக்களப்பில் நேற்றுக் காலை இடம்பெற்ற கண்ணி வெடித் தாக்குதலில் இரு பொலிசார் பலியாகினர்.

மட்டக்களப்பு வாழைச்சேனைப் பகுதியில் நடைபெற்ற இக்கண்ணிவெடிப்பு சம்பவத்தில் இரு பொலிசார் பலியாகினர். இருவர் காயமடைந்தனர் என கொழும்பில் பொலிஸ் தலைமையகம் அறிவித்தது.

# பொலிசாருக்குள் மோதல் இரு இன்ஸ்பெக்டர்கள் பலி

(கொழும்பு)

செட்டிகுளத்தில் இரு ரிசேர்வ் இன்ஸ்பெக்டர்கள் கடந்த வாரம் துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் இறந்து கிடக்கக் காணப்பட்டனர். செட்டிகுளம் பாதுகாப்பு

(4ஆம் பக்கம் பார்க்க)

---

... காவல் நிலையமருகே வந்த போது மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்தது.

குண்டு வெடிப்பால் பஸ்ஸின் நடுப்பகுதி பலத்த சேதமடைந்தது. அருகிலிருந்த

(கொழும்பு)

குண்டு வெடிப்பிற்கு உள்ளாகிய பஸ்வண்டி அநேகமாக இராணுவத்தினரின் போக்குவரத்திற்கே பயன்

## பிரதேச சபை அதிகாரி தகவல்

பட்டு வந்ததை நான் அவதானித்துள்ளேன். மேலும் பஸ்ஸின் சாரதிக்கும் சோதனைச்சாவடியிலுள்ள இராணுவத்தினருக்கும் நன்கு பழக்கம் இருந்ததால், பஸ் வழியில் சோதனையிடப்படவில்லை என நேற்று குண்டுவெடிப்பு இடம் பெற்ற பஸ்ஸில் பயணம் செய்தவரும் பிரதேச சபை அதிகாரியுமான ரணசிங்க ஏஜென்சி செய்திஸ்தாபனம் ஒன்றிற்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், ''குண்டு வெடித்த போது அதில் பல இராணுவத்தினர் இருந்திருக்கலாம். இந்தபஸ் றம்பாவச் சந்திக்கு சில யார் தூரத்தில் சென்று கொண்டிருந்த போது குண்டு வெடித்தது. இந்த வண்டியில் சிலவேளைகளில் சிங்கள மக்களும் இராணுவத்துடன் சேர்ந்து பயணம் செய்வது உண்டு'' என்றார்.

# பாடசாலை மேற்பார்வைக்கு 26முன்னாயத்தம் அறிவிப்பு

(நமது நிருபர்)

யாழ். மாவட்ட பாடசாலைகளில்திட்டமிடப்பட்ட வலய, கோட்ட மட்ட மேற்பார்வையால் பாடசாலைகளில் புத்தூக்கம் ஏற்பட்டுள்ளது.

மாணவர்கள் கல்வியில் தமது இலக்குகளை அடையும் பொருட்டு அவர்களது பெறுபேற்றை உயர்த்தும் நோக்கில் இவ்வாண்டு மேற்பார்வை திட்டமிட்ட வகையில் பாடசாலைகளிடையே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவை வலய மட்ட மேற்பார்வைக் குழுவினாலும், கோட்ட மட்டக் குழுவினாலும் மேற்கொள்ளப்படுகின்றன. பாடசாலைகளில் கற்பித்தலுக்கேற்றசூழ்நிலையை ஏற்படுத்தும் வகையில் பாடசாலை மேற்பார்வையின் போது அதிபர்கள் தத்தமது பாடசாலைகளில் 26 விடயங்களை கருத்தில் கொண்டு முன்னாயத்த நிலையை மேற்கொள்ளுமாறு கல்விப்பணிப்பாளரால் கேட்கப்பட்டுள்ளனர்.

நேரக்கிரமம் பார்த்தல், முகாமைக்குழு விபரம் (கடமைப்பட்டியல்). மாணவர் அனுமதி, நேரசூசி, ஆண்டு அமுலாக்கல் திட்டம் (நாட்காட்டி), ஆண்டிறுதித் தேர்

(4ஆம் பக்கம் பார்க்க)

# ராணுவம் பயன்படுத்தும் பஸ் என அதிகாரி ஏற்பு

(கொழும்பு)

றம்பாவவில் நேற்று குண்டு வெடிப்புக்கு உள்ளாகிய பஸ் தனியாருக்குச் சொந்தமானது எனவும் விடுமுறையைக் கழிக்கச் செல்லும் இராணுவத்தினரையும், அவர்களது குடும்பத்தினரையும் ஏற்றிச் செல்ல இவ்வண்டி பயன்படுத்தப்பட்டு வந்ததாகவும் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வண்டி இராணுவத்தினரின் பாவனையிலேயே இருந்து வந்ததாக தெரிவித்த அவர் இது புலிகளின் செயலாக இருக்குமென நம்பப்படுவதாகவும் தெரிவித்தார்

# சமாதானத்துக்கான கோரிக்கைகள் அநேகமாக நிராகரிக்கப்படுகின்றன

## பாப்பரசர் யோன் போல் தெரிவிப்பு

(வத்திக்கான் நகர்)

போரினால் பாதிப்புக்குள்ளாகும் நாடுகளில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான கோரிக்கைகள் அநேகமாகப் புறக்கணிக்கப்படுகின்றன. அதனால் போரினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது. இவ்வாறு பாப்பரசர் யோன் போல் கூறியுள்ளார்.

சிறிலங்கா, அவுஸ்ரேலியா, மாலி, பாகிஸ்தான், றோகோ, புறூண்டி, தாய்லாந்து ஆகிய நாடுகளைச்சேர்ந்த தூதுவர்கள் மத்தியில் பேசும் போதே பாப்பரசர் இவ்வாறு தெரிவித்தார்.

துன்பகரமான போராட்டங்களினால் புண்படுத்தப்பட்ட ஒரு உலகத்தில் நாம் வாழ்கிறோம். இப்படியான உலகில் சமாதானத்துக்கும் பேச்சுவார்த்தைகளுக்குமான கோரிக்கைகள் அநேகமாக நிராகரிக்கப்படுகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# கசட் ரெக்கோடரினுள் குண்டு வைக்கப்பட்டது

## நடவடிக்கை தலைமையகம் தெரிவிப்பு

(கொழும்பு)

மதவாச்சி றம்பாவ பொலிஸ் காவல் நிலையமருகே நேற்றுக்காலை இடம்பெற்ற குண்டுவெடிப்பின் போது குண்டு பஸ்ஸில் கசட் ரெக்கோடர் ஒன்றினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. விசாரணை மூலம் தெரியவந்துள்ளதாகவும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் நடவடிக்கை தலைமையகம் நேற்று மாலை விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இக்குண்டு வெடிப்பில் 40 பேர் காயமடைந்ததாகவும் கவலைக்கிடமானவர்கள் அநுராதபுரம் பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டது. அரச பகுப்பாய்வாளர் உதவியுடன் விசாரணைசள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# மனிதஉரிமை மீறல் வழக்கு சென்ற ஆண்டு அதிகரிப்பு

(கொழும்பு)

மொத்தம் 536ஆள்கொணர்வு வழக்குகளும், 469அடிப்படை மனித உரிமைகள் மீறல் வழக்குகளும் 1993இல் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 1992

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனையாகிறது

உளவியலும் நவீன கற்பித்தலியலும் கலை இலக்கிய கோட்பாடுகள் கலாநிதி சபா. ஜெயராசா. விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (சி-8407)

### கொம்பியூட்டர் வகுப்புகள்

C S A ஆரம்பம் 4 மாத BASIC Programming 15-1-94 காலை 8-30 மணி 7 மாத Data processing and BASIC Programming 18-1-94 காலை 8-30 மணி Computer Science Academy, Navalady Lane, Thirunelvely. (சி-8379)

### பெற்றுக்கொள்ளவும்

ஒரு தொகைப்பணம் சுன்னாகம் சி. சுப்பிரமணியம் அன் கோவில் கண்டெடுக்கப்பட்டது: உரியவர் ஆதாரம் காட்டிப் பெறவும். (சி-8420)

### கோழிக்குஞ்சு

HYLINE BROWN பேட்டுக் குஞ்சுகள் பதிவுசெய்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். சேவல் குஞ்சுகள் பதிவின்றியும் கிடைக்கும். விறாத்துக் குஞ்சுகளும், ஒரு கிலோவிற்கு உட்பட்ட சேவல் குஞ்சுகளும் பெற்றுக்கொள்ளலாம். கலையரங்க அருகாமை, உரும்பராய் சந்தி. (7272)

### தெருக்கூத்து

யாழ் மாவட்டத்திலே நடாத்தப்படவுள்ள 3 ஆவது வதிவிட வேளாண்மைப் போட்டியிலே கூடுதலானவர்களைப் பங்கு கொள்ளச் செய்யும் நோக்கோடு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு நடவடிக்கைகளைமேற்கொண்டு வருகிறது.

தற்போது இதனை வலுவடையச் செய்ய வைக்கும் நோக்கோடு வதிவிட வேளாண்மையின் அவசியம்தொடர்பான தெருக்கூத்து ஒன்றினையும் தயாரித்து நடாத்தி வருகிறது.

வலிகாமம் கோட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் உற்பத்தியில் ஈடுபடுமாறு கோரும் இந்த தெருக்கூத்து தற்போது பரவலாக நடாத்தப்பட்டு

செஞ்சிலுவை கப்பலின்மையால்

# நிறுவனங்கள் பொருள்கள் எடுத்துவருவதில் சிரமம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பற்சேவை இன்மையினால் பல அரச சார்பற்ற நிறுவனங்கள், பொது நிறுவனங்கள் என்பன தமக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களைக் கொழும்பிலிருந்து எடுத்து வருவதில் பல சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றன.

தற்போது சேவைக்கு அமர்த்தப்படும் கப்பலில் தனியார் போட்டிபோட்டு இடம்பிடித்துக் கொள்வதால் இந் நிறுவனங்களுக்கு இட ஒதுக்கீடு கிடைப்பதில் பலத்த சிரமத்தை எதிர் நோக்குகின்றனர்.

இதனால் இந் நிறுவனங்களின் பொருள்கள் கொழும்புத் துறைமுகத்தில் நீண்டகாலமாகத் தவமிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது (நி)(க)

### ஆண்டு விழா

மிருசுவில் படித்த மகளிர் திட்டத்தில் துர்க்கா இந்து இளைஞர் மன்றம் இரண்டாவது ஆண்டு விழா எதிர் வரும் சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா கலந்து கொள்வார். (யோ)

# இ. தொ. கா. முரண்பாடு சுமுகமாகத்தீர்க்கவேண்டும்

## ஜனாதிபதி விருப்பமாம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பலத்திற்கு இ. தொ. கா முக்கியமான ஒரு ஸ்தாபனம் அந்த ஸ்தாபனம் தொடர்ந்து சக்தியுள்ளதாகவும், அதில் எவ்வித பிளவுமின்றியும் தொடர்ந்து ஐக்கியத்துடனும் செயற்படல் வேண்டும் என்று ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க கூறியுள்ளார்.

இ. தொ. கா. பொதுச் செயலாளரும், கைத்தொழில் ராஜாங்க அமைச்சருமான எம். எஸ். செல்லச்சாமியிடம் இதுபற்றி தான் வலியுறுத்தி இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

செல்லச்சாமி அடிக்கடி ஜனாதிபதியைச் சந்திப்பது குறித்து பத்திரிகையாளர்களின் கேள்விக்கு பதிலளித்த அவர் மேலும் கூறுகையில், இ. தொ. கா. பலமுள்ள ஒரு நல்ல ஸ்தாபனம். இந்த நிலை தொடர்ந்து அந்த ஸ்தாபனத்தில் பேணப்படல் வேண்டும். ஸ்தாபனத்தின் முக்கியஸ்தர்களுக்கு இடையிலான முரண்பாடு தீர்க்கப்பட்டு இருவரும் ஒன்றாக செயற்படவேண்டுமென்றே இன்று பல அரசியல்வாதிகளும், தொழிற்சங்க முக்கியஸ்தர்களும் கோரிவருவதாகவும் அவர் விபரித்தார்.

### ஆதரவாளர்கள் மோதல்

அம்பாறை மாவட்டத்தில் பிரதேசசபைத் தேர்தலில் போட்டியிடும் கட்சி ஆதரவாளர்களுக்கு இடையே மோதல்கள் நிகழ்ந்துள்ளன.

இம்மோதலில் எட்டுப்பேர் காயமடைந்துள்ளனர். ஏழு வாகனங்கள் வரை சேதமடைந்துள்ளன. மேலும் சம்மாந்துறையிலே மோதல்கள் பெருவாரியாக நடந்தது. அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று ஆகிய இடங்களிலும் சிறு, சிறு குழப்பங்கள் ஏற்பட்டன.

# புதிய கிராம சேவையாளர் விரைவில் நியமனம்

(நமது நிருபர்)

போட்டிப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டும் இது வரை நியமனம் வழங்காது இழுத்தடிக்கப்பட்ட கிராம அலுவலகர்களுக்கான நியமனம் வெகுவிரைவில் வழங்கப்படவுள்ளதாக வடக்கு கிழக்கு மாகாணசபை தலைமை ... ளாக கடமையாற்றும் சகல கிராம அலுவலர்களின் மீள் நியமனங்களும் 94ஆம்ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி முதல் நிறுத்தப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சின் பிரதிச் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மீள் நியமனம் பெற்று

பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்:

# சகாய ஆசிரியர்களுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

கல்வி பொதுத்தராதர பத்திர உயர்தரப் பரீட்சையில் தோற்றி பல்கலைக் கழகங்களில் நுழையும் தகைமையை பெற்றுள்ள மாணவர்களை சகாய ஆசிரியர்களாக சேவையில் அமர்த்துவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுவதற்கு தற்போது தெரிவாகியுள்ள மாணவர் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். 1992/93 ஆண்டுகளில் உயர்தரப்பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக்கழகத்திற்கு நுழைய தகைமைபெற்றவர்களேவிண்ணப்பிக்கலாம். நியமனங்கள் ஆசிரியர் பற்றாக்குறையுள்ள கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களை கற்பிப்பதற்கே வழங்கப்படவுள்ளன. வெற்றிடங்கள் உள்ள மாவட்டங்களில் நிரந்தர வதிவையுடையவிண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மாதமொன்றுக்கு 1500 ரூபா கொடுப்பனவும் வழங்கப்படும். விண்ணப்பப்படிவங்களை இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பதாரர் கடமையாற்ற விரும்பும் பாடசாலை அமைந்துள்ள மாகாணத்தின் மாகாண கல்விப்பணிப்பாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டப்பாடசாலைகளில் வெற்றிடங்கள் உள்ளன.

இது குறித்து மேலதிக விபரங்களை ஈழநாதம் அலுவலகத்தில் பார்வையிடலாம்.

## அறிவித்தல்

கந்தர்மடம் நல்லூர் வீதியில் அமைந்திருந்த பண்டிதர் சரணாலயத்தின் அசையும், அசையா சொத்துக்களை வைத்திருப்போர் 25-01-94ற்கு முன் 83/2, காங்கேசன்துறை வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைமைச் செயலகத்தில் ஒப்படைக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

(7267)

## இடைநிலை, இறுதிநிலை வங்கியாளர் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள் பற்றிய அறிவித்தல்

**இடம்:** யாழ்ப்பாணக்கல்லூரி வெளிவாரிப் பட்டதாரிப்பிரிவு (இலங்கை வர்த்தக வங்கிக்கு அருகில்)

**காலம்:** 22-01-1994 (சனிக்கிழமை)

**நேரம்:** காலை பத்து மணி

பங்கு பற்ற விரும்புவோர் மேற்படி தினத்தில் சமுகம் தரவும். (சி-8412)

## TENDER NOTICE
## UNIVERSITY OF JAFFNA
## SUPPLY OF UNIFORM MATERIALS

Sealed Tenders are invited for the supply of 550 metres Dark Grey Synthetic suiting.

**Conditions:**

1. Tenderers should forward a postal order / money order for Rs 250/- being non refundable tender fee drawn in favour of Bursar, University of Jaffna
2. Sample 6''x6'' material should be attached with the tender.
3. Selected tenderers should be able to supply the material within three weeks on receipt of the confirmed order at the University of Jaffna.

Tenders should be forwarded to the Bursar, University of Jaffna, by registered cover or personally with the mark on the left hand corner of the envelope. ''Tender for the supply of Uniform Material'', to reach him on or before 15-02-1994 at 10 00 a m. Tenders will be opened on the same day at 10 30am

REGISTRAR

(சி-8400)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 22-05-1935

இறப்பு 21-12-1993

### அமரர் தாமோதரம் சின்னராஜா

(ஓய்வு பெற்ற கட்டடப் பொறியியலாளர்)

கடந்த 21-12-93அன்று காலமான அன்னாரினது அந்தியேட்டி கிரியைகள் 20-01-94 (இன்று) அன்னாரது இல்லத்தில் நடைபெறும். உறவினர்கள், நண்பர்கள், அனைவரையும் இந் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்

கோப்பாய் தெற்கு, கோப்பாய். மனைவி, மக்கள்

(7269)

பரவலாக நடாத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது

## புதிய தபால் பெட்டி

(கொழும்புத்துறை)

யாழ். பாஷையூர் புனித அந்தோனியார் மக்கள் முன்னேற்றச் சன சமூக நிலையத்தினரின் நீண்ட கால வேண்டுகோளுக்கு இணங்கி யாழ். பிரதம தபால் திணைக்களத்தின் பிரதம தபால் அதிபர் திரு. எஸ். ஜோடீஸ்வரன் உதவியால் சீமெந்தினால் தயாரிக்கப்பட்ட தபால் பெட்டி ஒன்று அண்மையில் வழங்கப்பட்டு பாஷையூர் கடற்கரை வீதியில் அமரர் திரு. எம். ஜீ. ஆர். சிலைக்கு முன்பாக இவ்வூர் பொது மக்களின் உதவியுடன் நிறுவப்பட்டுள்ளதாக நிலையத் தலைவர் திரு. ச. க. செபஸ்ரியாம்பிள்ளை தெரிவித்துள்ளார். (24)

## ஏற்பு ஊசி மருந்து பலத்த தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சுகாதாரப் பிராந்தியத்திலுள்ள பெரும்பாலான அரசினர் வைத்திய சாலைகளிலும், அரசினர் மத்திய மருந்தகங்களிலும் ஏற்புநோய் தடுப்பு ஊசிமருந்துக்குப்பலத்த தட்டுப்பாடு நிலவிவருகிறது.

யாழ். பிராந்திய சுகாதார திணைக்களத்தின் மாவட்ட மருந்துக் களஞ்சியத்திற்கு கொழும்பிலிருந்து கடந்த மாதம் ஏற்பு தடுப்பு ஊசிமருந்துகள் அனுப்பிவைக்கப்படவில்லை எனவும் தெரிய வருகிறது.

இவ் ஏற்புத் தடுப்பு ஊசி மருந்துகளுக்கு யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் மருத்துவமனைகளில் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் அறியப்படுகிறது.

ஏற்புத் தடுப்பு ஊசிமருந்துக்கு மக்கள் மருந்துக் கடைகளில்ஏறி அலைந்து திரிவதைக் காணக்கூடியதாக உள்ளது. (24)

க்கு மாகாணசபை தலைமையகத்தில்இருந்து யாழ். செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது: புதிதாக கிராம உத்தியோகத்தர்களுக்கு வெகுவிரைவில் நியமனங்கள் வழங்க இருப்பதால் ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம் பெற்று கிராம அலுவலர்க

பட்டுள்ளது.

மீள் நியமனம் பெற்று கிராம அலுவலராக கடமையாற்றும் கிராம அலுவலர்களின் பிரிவை அருகில்உள்ள கிராம அலுவலர்கள் மூலம் பதில் கடமையாக வழங்கும் படியும் சகல பிரதேச பிரிவு செயலர்களையும் யாழ் மாவட்ட பிரதி ஆணையாளர் சுற்று நிருபம் ஒன்றின் மூலம் கேட்டுள்ளார். (சி)

## முதன்மை ஆசிரிய வெற்றிடம் விரைவில் நிரப்பப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலயம் 1-ல் மேலும் வெற்றிடமாகவுள்ள முதன்மை ஆசிரியர் பதவிகள் நிரப்பப்படவுள்ளது என்று யாழ் வலயம் - 1இன் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி கல்விக் கோட்டத்தில் ஆங்கில, கணித மற்றும் உடற்கல்வி ஆகிய பாடங்களிற்கும், தீவகக் கல்விக் கோட்டத்தில் கணித பாடத்திற்கும் மேற்படி பதவி வெற்றிடங்கள் உள்ளன.

இவற்றிற்கான தகைமையும் விபரமும் மற்றும் மாதிரி விண்ணப்பப் படிவமும் கோட்டக்கல்வி அலுவலகங்களில் பார்வையிடலாம்.

விண்ணப்பங்களை இம் மாதம் 26ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக தாம் பணிபுரியும் கோட்டக்கல்வி அலுவலகத்திற்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும் என விண்ணப்பதாரிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (பா)

## தொழில்நுட்ப கல்லூரிக்கு வர்ணம் பூசப்படுகிறது

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின் கட்டடங்களுக்கு வெள்ளை நிறப் பூச்சு அடிக்கும் வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த சில வருடங்களாக இத்தகைய வேலை எதுவும் மேற்கொள்ளப்படாமலிருந்தது குறிப்பிடத் தக்கது. (67)

## கல்விக்கல்லூரி அனுமதிக்கு யாழ்ப்பாணத்தில் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கீழ்வரும் இரண்டுபரீட்சைகள் யாழ்ப் பாணத்தில் நடைபெறவுள்ளதாக யாழ் கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கல்விக் கல்லூரி (பஸ் துன்ரட்ட) ஆங்கில பயிற்சிநெறி அனுமதிக்கான பரீட்சை இம் மாதம் 29 ஆம் திகதி சனிக்கிழமையும், கல்விக் கல்லூரி பொது ஆரம்ப, கணித, விஞ்ஞான நெறிகளுக்கான அனுமதிப் பரீட்சை இம்மாதம் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைகளுக் கான அனுமதி அட்டைகளை இம் மாதம் 27ஆம் திகதிவரை கிடைக்கப் பெறாதவர்கள் யாழ் கல்வித்திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும்படி அறிவுறுத்தப்படுகின்றனர். (பா)


## மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம்-பயிற்சி மாணவ ஒன்றிய வளர்ச்சிக்காக எதிர்வரும் 19-02-94, 20-02-94ஆகிய தினங்களில் யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் ஒன்பது பேர் கொண்ட விலகல் முறையிலான மாபெரும் இரண்டு நாள் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளது. இப்போட்டிக்கான நுழைவுச் சீட்டினை விற்பனை செய்யவரும்மாணவர்களுக்கும் நலன் விரும்பிகளுக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு சகல பொதுமக்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தினரும், பயிற்சி மாணவ ஒன்றியமும்.

(சி-8417)

## விறகு தேவை

சங்கானை வடிசாலை உபயோகத்திற்கு 5000 தூக்குக்கு மேல் விறகு தேவை. இதனைப் பகுதியாகவோ, மொத்தமாகவோ வழங்கக் கூடியவர்கள்விலை விபரங்களுடன் தமது கேள்விப் பத்திரங்களை எமது கீழ்க்காணும் முகவரியில்31-01-1994 ஆந் திகதிக்கு முன்னர் மூடிய உறையிலிட்டு நேரிலோ அல்லது தபாலிலோ சமர்ப்பிக்கவும்.

### வெற்றுப் போத்தல்கள் தேவை

முழுப் போத்தல்கள், முக்கால் போத்தல்கள் நியாய விலையில் சிறு தொகையாகவோ, பெருந் தொகையாகவோ கொள்வனவு செய்யப்படும்.

வெற்றுப்போத்தல்கள் சேகரித்து வழங்குபவர்கள் எம்மிடம் பதிவு செய்து கொள்வின், சேகரிப்பதற்கு வசதியாக முற்பணம் வழங்கி உதவ முடியும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி,

பொது முகாமையாளர்,

வலிகாமம் பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி,
மானிப்பாய்.

(மானிப்பாய் பழைய தபால் கந்தோர் அருகில்)

(சி-8419)

கோப்பாய் தெற்கு, மனைவி, மக்கள்
கோப்பாய்- (7269)


## நினைவு கூருகின்றோம்... 1994-01-20

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்-கரவெட்டிப் பகுதியில் துண்டுப்பிரசுரம் விநியோகித்துக் கொண்டிருக்கையில் சிறிலங்காக் காவற்றுறையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**ராஜ்மோகன்** (சிவராமலிங்கம் ராஜ்மோகன்-தும்பளை, பருத்தித்துறை - யாழ்)

1986ஆம் ஆண்டு திருகோணமலை சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சாம்பல்தீவைச் சேர்ந்த இளைஞன், உப்புவெளி, அல்லைத் தோட்டத்தைச் சேர்ந்த மற்றொருவர் ஆகிய 02 தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு யாழ்-சத்திரச்சந்தியில் வைத்து தேசவிரோதக் குழுவினரால் கொலை செய்யப்பட்ட

**ராஜன்** (குலசேகரம்பிள்ளை புவிராஜசிங்கம்-562, கடற்கரைவீதி, பாசையூர் - யாழ்)

மன்னார்-சிலாவத்துறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பெண் உட்பட அதே இடத்தைச் சேர்ந்த 06 தமிழர்கள்.

யாழ்ப்பாணத்தில் இந்தியப்படையினரால் கைதாகி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு பின் மத்திய பேருந்து நிலையத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்ட தமிழிளைஞன்,

1990ஆம் ஆண்டு யாழ்-மணியந்தோட்டப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கணேஷ்** (அழகரத்தினம் சத்தியேந்திரா-அம்பனை, சுன்னாகம் மேற்கு-யாழ்)

1991ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட மாவடி வேம்பைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

யாழ்-வல்வெட்டித்துறைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட மூன்றுமாதக் குழந்தை உட்பட 10 தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு மட்டக்களப்பு - காஞ்சிரங்குடாப் பகுதியில் சிறிலங்காஇராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 04 தமிழர்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(இ-8415)

சிந்தனைக்கு

ஒரு சமூகத்தின் உடல்நல நிலை
அதன் ஒழுக்கத்திற்கு தவறாத அறிகுறியாகும்.

-- ஜேம்ஸ் மார்ட்டினோ

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 20-01-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

## எமது மக்கள் என்ற உணர்வு வேண்டும்

யாழ் நகர பேக்கரி ஒன்றில் பாணிற்கென மா சீமெந்துத் தரையில் குழைக்கப்பட்டதாக கண்டுபிடிக்கப் பட்டமையானது ஒரு அதிர்ச்சி அளிக்கும் செய்தியே ஆகும். இது அப் பேக்கரி உரிமையாளரின் பொறுப்பற்ற தனத்தையும், குரூரமான சிந்தனையையுமே காட்டுவதாகும். இது ஒரு வெறுக்கத்தக்க செயலுமாகும்.

உணவு தயாரிக்கும் இடங்கள், விற்பனை செய்யும் இடங்கள் என்பனவற்றில் சுகாதாரம் பேணப்படுதல் தொடர்பாகக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் பற்றியும், அதற்கான ஒழுங்கு விதிகள் பற்றியும் சுகாதாரப் பகுதியினர் பல தடவை எச்சரித்திருந்தனர். இருப்பினும் இதில் எந்தளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்ற கேள்வியை இவ் பேக்கரிச் சம்பவம் கேட்க வைத்துள்ளது.

பொருளாதார முற்றுகை, மருந்துப் பொருள் தட்டுப்பாடு, போக்குவரத்துத் தடை, யுத்த சூழ்நிலை, என்பன ஏற்கனவே சுகாதாரம் தொடர்பாகவும், சூழல் மாசுபடுதல் தொடர்பாகவும் பல பிரச்சினைகளை உருவாக்கியிருந்தன. இதில், பொருளாதாரத் தடையால், போசாக்கின்மையை தனியான பிரச்சினையாக உருவாக்கியது. இதேவேளை யுத்த சூழ்நிலையானது, பெரும் இடிபாடுகளையும், அழிவுகளையும் ஏற்படுத்தி சூழல் மாசடைதலுக்கு வழிவகுத்த அதேவேளை, பெரும் தொகையில் மக்களை இடம்பெயர வைத்து அகதிகள் என்ற நிலையையும் உருவாக்கியது. இந்நிலையில், சூழல் பாதுகாப்பும், சுகாதாரமும் பெரும் பாதிப்பிற்குள்ளாகியது.

இந்நிலையில், மருந்துப் பொருள்களுக்கும், கிருமி நாசினிகளுக்கும் நிலவிய தட்டுப்பாடானது தொற்று நோய்ப் பெருக்கத்திற்கு வழிவகுத்தது. இதேவேளை கடந்த வருட இறுதியில் பெய்த கனத்த மழையானது பெரும் வெள்ளப் பெருக்கை ஏற்படுத்தியதோடு, பெருமளவில் நீர்நிலைகளை மாசுபடுத்தியதினால் தொற்று நோய்கள் சில வேகமாகப் பரவும் நிலையும் உருவாகியது.

# பூநகரி கூட்டுப் படைத் தளம் வீழ்ச்சி; ராணுவ விசாரணை குழுவின் முக்கிய முடிவுகள்!

பூநகரி அனர்த்தம் தொடர்பான இராணுவ விசாரணை அறிக்கை இப்போது வெளிவந்துவிட்டது. அந்த அறிக்கையின் இரகசியத் தன்மைக்கு அப்பாற்பட்டு அதன் உள்ளடக்கங்கள் சில ஏற்கனவே பல்வேறு பத்திரிகைகளிலும் வெளிவந்துவிட்டன- பொதுமக்கள் என்ன நடக்கிறது என்பதை அறிவதற்கு இது வாய்ப்பாகப் போய்விட்டது. விரல்விட்டு எண்ணக் கூடிய சில உயர் இராணுவ அதிகாரிகளுக்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும் இந்த யுத்தம் மிகவும் முக்கியமானதாகும். கடந்த 16 ஆண்டுகளுக்கும் மேலாக நீடிக்கும் இந்த யுத்தம் முடிவற்று நீண்டு கொண்டே செல்கிறது.

இதுவரை எந்த முன்னேற்றமும் ஏன் எட்டப்படவில்லை என்பது தொடர்பாக பொது மக்களுக்கு தகவல் தெரிவிக்கப்படாகவேண்டும். பூநகரி அனர்த்தம் சிறிலங்கா இராணுவம் வரலாற்றில் இதுவரை சந்திக்காத மிகப் பெரும் தோல்வி என்பதால் இவ்விடத்திலிருந்து இது ஆரம்பிக்கப்பட வேண்டும். பூநகரியின் பெருமழிவைத் தொடர்ந்து இராணுவத் தளபதி பதவி விலக வேண்டி ஏற்பட்டது, இதுவரை காலமும் இல்லாத முதல் நிகழ்ச்சி. பூநகரி அழிவு தொடர்பான இராணுவ விசாரணை அறிக்கை எமது இன்றைய நிலை தொடர்பாக ஒரு விழிப்பை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கலாம்.

பூநகரி அனர்த்தத்திற்கான பொறுப்பு பூநகரி அமைந்திருக்கும் வடபகுதி இராணுவ கட்டளைப் பீடத்தின் தோளில் நேரடியாக சுமத்தப்படுவது தவிர்க்கப்பட முடியாதது. பூநகரி அனர்த்தத்திற்கான தார்மீகப் பொறுப்பையேற்று இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ணா பதவி துறந்த போதும், அவர் மீது இராணுவ விசாரணை மன்று எந்தக் குற்றச்சாட்டையும் சுமத்தவில்லை. வடபகுதியில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகள் மத்தியில் கூட்டுப் பொறுப்புணர்வும் ஒருங்கிணைந்த செயற்பாடும் இருக்கவில்லை என்றே அறிக்கை மூலம் உணர முடிகின்றது.

மேஜர்ஜெனரல்ரோரிலும் ஒருவராவது பூநகரி இராணுவமுகாமிற்கான கட்டளையிடும் அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கவில்லை. பிரிகேட் கமாண்டர் ஜி. பி. குலதுங்க தாக்குதல் சமபவம் இடம்பெற்றபோது ஊர்காவற்துறையில்இருந்தார் தெளிவான கட்டளையிடும் அமைப்பு அற்றநிலையிலும் கேணல் டி, டி, ஆர். டி. சில்வா பூநகரி படைத்தளம் முற்றிலும் விழுந்து விடாமல் தடுத்துக் கொண்டிருந்தார். இதற்காக அவருக்கு களத்தில் வைத்து பதவிஉயர்வுவழங்கப்பட்டது.

அறிக்கை மேலும் கூறுகையில், நவம்பர் 1993, 11-ம் திகதி அதிகாலை தாக்குதல் ஆரம்பித்து சுமார் 15 நிமிடங்களுக்கு இடையில் கட்டளை பிறப்பிக்கும் முழு அமைப்பும் சீர்குலைந்து போய்விட்டது அப்போது அங்கு பிளாட்டூன், கம்பெனி பட்டாலியன் என்று எதுவுமே இருக்கவில்லை. படையினரும் அதிகாரிகளும் குழப்பத்துடன் அங்குமிங்குமாக சிதறி ஓடிக் கொண்டிருந்தனர். படையினருக்கு யார் நண்பர்கள் யார் எதிரிகள் என்றே இனங்காண முடியவில்லை. இருட்டின் மத்தியில் எவரையும் அடையாளம் காணக் கூடிய எத்தகைய குழுஉக் குறிகளும் வழங்கப்பட்டிருக்கவில்லை. விடுதலைப்புலிகள் தமக்கிடையே இனங்காணக் கூடிய வகையில் வெள்ளைத் தோட் பட்டைகளை அணிந்திருந்தனர். அத்துடன்பச்சை நிற டோர்ச் லைற்றுகளையும் பயன்படுத்தினர் பகல்நேரத்தில் மஞ்சள் நிறக்கொடிகளைப் பயன்படுத்தினர்.

11-ம் திகதி காலை ஆறு மணியளவில் எல்லா முன்னணிப் பாதுகாப்பு அரண்களும் வீழ்ச்சி அடைந்துவிட இலகு காலாட்படையின் முன்பாக சிறுபகுதியும், கஜபா படைப்பிரிவின் தலைமையகமும் மட்டுமே இராணுவத்தின் பிடியில் தொடர்ந்து இருந்தது. தாக்குதல் நடந்தபோது வடபகுதி இராணுவத்தின் இரண்டாவது உயர்நிலை அதிகாரியான பிரிகேடியர் ஜாலிய நம்முனி, பலாலியில் தங்கியிருந்தார். வடபகுதிக்கான கடற்படை மற்றும் விமானப் படையினருக்கு உத்தரவிடும் அதிகாரமும் அவருக்கு இருந்தது.

வில்லை என்பதுடன் எவரும் எவரது நடவடிக்கையையும் மேற்பார்வை செய்யவில்லை.

பிரிகேட் கமாண்டர் இராணுவ விசாரணையாளர்கள் முன்பு சாட்சியம் அளிக்கையில் முன்னணிப் பாதுகாப்பு அரண்களை மேஜர் ஜெனரல் தளுவத்தவோ, அல்லது அவரது உதவியாளர் ஜாலிய நம்முனியோ அல்லது பிரிகேட் கமாண்டரோ அல்லது பட்டாலியன் கமாண்டரோ எவரும் பார்வையிடவே இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

தீவிரமான தாக்குதல் எதையும் சமாளிப்பதற்கு முன்னணிப் பாதுகாப்பு அரண்கள் பூநகரியில் போதுமானவையாக இருக்கவில்லையென்று விசாரணைக்குழு தெரிவிக்கின்றது. முன்னணி அரண்களுக்கு இடையே இடைவெளி அதிகமான அளவில் விடப்பட்டிருந்தமை தொடர்பாக லெப். கேணல் தவுலகல மீது விசாரணைக்குழு குற்றம் சாட்டியுள்ளது. ஒவ்வொரு பாதுகாப்பு அரணுக்கு முன்பாக துப்பாக்கிச் சூடு நடத்தக்கூடிய 'வில்' போன்ற வளைவுகளால் தொடர்பு படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் மூலம் பெருமளவில் ஊடுருவுவதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. தாக்குதல் நடைபெறுவதற்கு முன்பாகவே பாதுகாப்பற்ற அரண்களுக்கு ஊடாக சுமார் 400 க்கும் அதிகமான புலிகள் ஊடுருவி விட்டதாக விசாரணைக் குழுவினர் மதிப்பிட்டுள்ளனர்.

கஜபாகு படைப்பிரிவைச் சேர்ந்த பொறுப்பதிகாரி லெப். கேணல் தவுலகல. முன்னணி பாதுகாப்பு அரண்களை இணைக்காமலும்கடற்படை நடவடிக்கைகளுடன் தொடர்பு படுத்தாமலும்இருந்துள்ளமைக்காக குற்றம் சாட்டப்பட்டுள்ளார். இவர் தாக்குதல் நடைபெற்ற போது பூநகரியில் இருக்கவில்லை.

இரவு 11-00 மணியளவில் தாக்குதல் குறித்ததான முன் எச்சரிக்கை கிடைத்தபோதும் கூட தமது துருப்பினருக்கு இது பற்றி அறிவிக்கத்தவறியமைக்காக கேணல். டி. பி. ஆர். டி சில்வா குற்றம் சாட்டப்பட்டுள்ளார் இராணுவ புலனாய்வினரின் முன்னெச்சரிக்கை உதாசீனம்

ளைக் கூட இழந்தனர்.

முதலாவது தாக்குதலுக்குப் பின்னர் துருப்பினர் சிதறிப் போனதுடன், குழப்பத்திலும் ஆழ்ந்து சிறுசிறு குழுக்களாயினர் என்று விசாரணைக் குழு கண்டறிகிறது. இந்த நிலையில் படையில் இருந்த ஒவ்வொருவரும் தமது உயிரைத் தக்கவைத்துக் கொள்ளவே போராட வேண்டியிருந்தது. அச்சம் மிகுந்த சூழ்நிலையில் தமது இருப்பிற்காக மட்டுமே புலிகளைக் கொல்ல வேண்டிய நிலையில் படையினர் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று விசாரணைக்குழு கண்டறிந்துள்ளது. இந்த நிலையில் துப்பாக்கிச் சூடு நடத்துவது தொடர்பாக எவரும் கட்டுப்பாடு விதிக்கக் கூடிய நிலை இருக்கவில்லை. எந்த இலக்குகளையும் அடையாளம் காணாமலேயே கண்டபாட்டிற்கு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் ரவைகள் தீர்ந்து போன நிலையில் தாம் பின் நோக்கி ஓடுவதற்கு முன்பாக தமது ஆயுதங்களை பற்றை மறைவுகளில் ஒழித்து வைக்க வேண்டிய நிலை படையினருக்கு ஏற்பட்டது.

அடுத்த நாள் பகலில் புலிகள் தமது தரப்பில் காயமடைந்தவர்களை மீட்பதிலேயே கவனம்செலுத்தினர்.

பூநகரி முகாம் மீதான தாக்குதல் தொடர்பாக இராணுவ புலனாய்வு அதிகாரி பிரிகேடியர்எல். பி. பள்ளகல பலமுறை முன் எச்சரிக்கை செய்துள்ளார். எனினும் இதற்கு முந்திய இத்தகைய முன்னெச்சரிக்கை எதுவும் காரிய சாத்தியமாகவில்லை. கடந்த ஜனவரி 1993இல் முதல் முறையாக இத்தகைய முன்னெச்சரிக்கை விடப்பட்டது. அதைத் தொடர்ந்து புலிகள் முக்கியதினமாக கருதும் ஒவ்வொரு தினத்திலும் இத்தகைய முன்னெச்சரிக்கை விடப்படுவது வழமையாகி விட்டது. இவை சரியான தகவல்களாக ஒருபோதும் ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

இதன்மூலமாக பிரிகேடியர் பள்ளகலவின் முன்னெச்சரிக்கைகள் அதிகாரிகள் மட்டத்திலும், படையினர் மத்தியிலும் உதாசீனப்படுத்தப்பட்டு வந்தது இராணுவ விசாரணைக் குழுவினால்

மாகவே கருதப்பட்டது.

இராணுவ புலனாய்வுப் பிரிவுத் தலைவரின் தகவல்களுக்கு இராணுவத்தினர் மத்தியில் இருந்த செல்வாக்கு பலத்த தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாகும். இவரது தகவல்கள் எப்போதும் தவறான தகவல்களாகவே இருந்துள்ளமையால் படையினர் உதாசீனப்படுத்தும் நிலையை எட்டியிருந்தது புலனாய்வு பிரிவின் நம்பகத் தன்மை பேணப்படாமையால் அதன் தகவல்கள் முக்கியமற்றவையாகிப் போய் இருக்கிறது.

பூநகரி படைத்தளத்தில் இருந்த படையினரில் ஒரு பகுதியை கிழக்கிலுள்ள படையினருக்கு உற்சாகம் ஊட்டுவதற்காக மேஜர் ஜெனரல் தளுவத்த அனுப்பியிருந்ததாகவும் இராணுவ விசாரணை அறிக்கை குறிப்பிடுகிறது.

கிழக்கில் தேர்தல் நடத்துவதற்கு ஏதுவாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் முடிவுக்கு ஏற்பவே இது மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகிறது. தளுவத்தவின் இந்த நடவடிக்கையை இராணுவ விசாரணைக்குழு ஏற்றுக்கொண்டுள்ள போதும் கூட மேஜர் ஜெனரல் தளுவத்த அவசர நிலையை எதிர்கொள்ளும் வகையில் ஆகக்குறைந்தது ஒரு பட்டாலியனையாவது தயார் நிலையில் வைத்திருக்காமைக்காக குறை கூறியுள்ளது.

மேஜர் ஜெனரல் தளுவத்தவின் கட்டுப்பாட்டின் கீழ் 31,000 துருப்புகள் இருக்கின்ற நிலையில் அவரால் மிகச் சுலபமாக ஒருபட்டாலியன் இராணுவத்தை அவசர நிலைக்காக தயாராக வைத்திருக்க முடியும் என்று இராணுவத்தளபதி சுட்டிக் காட்டியதாக சில வட்டாரங்கள் கூறியுள்ளன.

கிடைக்கக்கூடிய மனித வளத்தைப் பயன்படுத்தி முன்னணிப் பாதுகாப்பு அரண்களைப் பாதுகாக்கத்தவறிவிட்டதாகவும் தளுவத்த மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இராணுவத் தலைமை முன்னணி பாதுகாப்பு அரண்களின் நிலை தொடர்பாக நேரில் அறிந்திருக்கவில்லை. இந்த வகையில் பூநகரி இராணுவ முகாமிற்கான பாதுகாப்பு என்பது பாதுகாப்புத்

நோய்கள் சில வேகமாகப் பரவும் நிலையும் உருவாகியது.

இந்நிலையில், சுகாதாரம் பேணுவது தொடர்பாக பல எச்சரிக்கைகள் பல தரப்பாலும் விடப்பட்டன. குறிப்பாக, உணவு நிலையங்கள் தொடர்பாக எச்சரிக்கைகளும், அறிவுறுத்தல்களும் பலமானவையாகவே இருந்தன. ஆனால், பாணிற்கான மாவைச் சீமெந்துத் தரையில் போட்டுக் குழைத்தமை கண்டுபிடிக்கப்பட்டமையானது இவ்எச்சரிக்கைகள், அறிவுறுத்தல்கள் எல்லோராலும் கவனத்திற் கொள்ளப்படவில்லை என்பதையே காட்டுவதாகவுள்ளது.

இதேவேளை, இவ்வாறான சுகாதாரக் கேடான நடைமுறைகள் தனியாக இவ் ஒரு பேக்கரியில் மட்டும் தான் ஏற்பட்டுள்ளது என்று திட்டவட்டமாகக் கூறிவிடவும் முடியாது. வேறும் உணவு தயாரிப்பு நிலையங்களில் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருப்பதற்கான சாத்தியப்பாடுகள் அதிகம் உள்ளதாகவே தெரிகின்றது.

இந்நிலையில், இது தொடர்பான விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மிகவும் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் அவசியமானதாகும். ஏனெனில், இது ஒரு சமூகப் பொறுப்பற்ற செயல் மட்டுமல்ல. ஏற்கனவே பெரும் நெருக்கடியிலும், இன்னல்களின் மத்தியிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு மேலும் துன்பத்தினை விளைவிக்கும் நடவடிக்கையும் ஆகும்.

ஆகையினால், அதிகாரிகள் சுகாதாரம் பேணப்படுதல் தொடர்பாக ஏற்கனவே தாம் விடுத்த அறிவுறுத்தல்கள், ஒழுங்கு விதிகள் கடைப்பிடிக்கப்படுவது தொடர்பாகத் தீவிர கவனம் செலுத்துவதோடு, இன்றைய சூழ்நிலையைக் கவனத்திற் கொண்டு புதிய சில விதிகளையும் அமுல்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும், குறிப்பாக நீர் தொடர்பான விடயத்தில் தீவிர கவனம் செலுத்துதல் அவசியமானதாகும். கடந்த வருட பெருமழைகளின் பின், கிணறுகளுக்கு 'குளோரின்' இடுமாறு கோரிக்கை விடப்பட்டதாயினும் அவற்றை நேரில் கண்காணிக்க வேண்டியது அவசியமாக இருப்பதோடு, சுற்றுப் புறச் சூழலை ஆராய்ந்து தேவையாயின் கிணற்றை முழுமையாக இறைப்பதற்கும் பணிப்புக்களை விடுத்தல் விரும்பத்தக்கதாகும்.

இதேவேளை, பேக்கரியோ அன்றி ஏனைய உணவு தயாரிப்பாளர்களோ, உணவக உரிமையாளர்களோ லாப நோக்கு என்பதை மட்டும் கருத்திற் கொள்ளாது சமூக உணர்வுடன் செயற்பட வேண்டும். எமதுமக்கள், எமது சமூகம் என்ற உணர்வுடன் சிந்திக்க வேண்டும். அவர்களின் உடல் நலம் எமது நலன் என்ற பரந்த மனப்பாங்கை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

மூலம் உணர முடிகின்றது.

மேஜர்ஜெனரல்ரோஹான் தளுவத்த, பிரிகேடியர் ஜாலிய நம்முனி, பிரிகேடியர் எல்.பி. பலகல்ல, பிரிகேடியர் ஜி.பி. குலதுங்க, கேணல் டி.டி.ஆர்.டி. சில்வா பிரிகேடியர் சாந்த கோட்டேகொட, லெப்.கேணல், எஸ் டபிள்யூ எல். தவுலகல, ஆகியோரைப் பெயர் குறிப்பிட்டு இராணுவ விசாரணை அறிக்கை குற்றம் சாட்டியுள்ளது. முதல் மூவர்மீதும் இராணுவ விசாரணை அறிக்கை திட்டவட்டமான குற்றச்சாட்டுகளை சுமத்தியிருக்கிறது. பூநகரி இராணுவ முகாமிலிருந்த இராணுவத்தினருக்கு பொறுப்பான அதிகாரியாக எவரையும் மேஜர் ஜெனரல் தளுவத்த நியமித்து இருக்கவில்லை என்று பூநகரி இராணுவ விசாரணை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதனால் படையினர் மத்தியில் தமது பொறுப்பதிகாரி யார் என்பது தொடர்பாக குழப்பம் இருந்துள்ளது.

மேஜர்ஜெனரல்ரோஹான் தளுவத்தையின் கீழ்தான் வடபகுதிக்கான இராணுவ கட்டளை பிறப்பிக்கும் பீடம் செயற்பட்டு வந்ததாக நாம் அறிகின்றோம். அவருக்கு அடுத்த இடத்தில் பிரிகேடியர் ஜாலிய நம்முனி இருந்திருக்கின்றார். பிரிகேடியர் ஜாலிய நம்முனியின் கீழ் வடபகுதியில் பல்வேறு படைப்பிரிவுகள் செயற்பட்டு வந்துள்ளன. அவற்றில் பூநகரி படைத்தளம் ஒன்று. பூநகரி படைத்தளத்தில் பிரிகேட் கமாண்டராகபிரிகேடியர் சாந்தகொட்டேகொட பணியாற்றினார். இவரின் கீழ் இரண்டு படைப்பிரிவுகளைச் சேர்ந்த துருப்பினர் இருந்தனர். பூநகரியில் தாக்குதல் இடம்பெற்றபோது 3ஆவது கஜபாகு படைப்பிரிவைச் சேர்ந்தோர் லெப். கேணல் எஸ். டபிள்யூ, எல். தவுலகலதலைமையிலும்நான்காவது இலகு காலாற்படைப் பிரிவினர் டி. பி ஆர். டி. சில்வா தலைமையிலும் இருந்தனர். எனினும் இந்த இருவ

படையினருக்கு உத்தரவிடும் அதிகாரமும் அவருக்கு இருந்தது.

தாக்குதல் ஆரம்பிக்கப்படுவதற்கு சில மணிநேரம் முன்பாக இராணுவ புலனாய்வுத்துறையைச் சேர்ந்த அதிகாரி ஒருவரால் தாக்குதலுக்கான சாத்தியப்பாடு குறித்து பிரிகேடியர் ஜாலிய நம்முனிக்கு எச்சரிக்கை செய்யப்பட்டிருந்ததாக அறிக்கை மேலும் கூறுகிறது. ஆனால் இந்த எச்சரிக்கையை அவர் உதாசீனப்படுத்திவிட்டதுடன் தனது கடமையிலிருந்து விலகமுன் பொறுப்பளித்த அதிகாரியிடம் புதிய முன்னேற்றங்கள் தொடர்பாக உடனுக்குடன் தனக்கு அறிவிக்கும்படி பணித்தார். விமானப்படை அல்லது கடற்படையின் உதவிகளைப் பெறுவதற்கோ அல்லது தனக்குக்கீழான படையினரை உசார் நிலையில் வைக்கவோ அவர் தவறிப்போய்விட்டார். ஆகக் குறைந்தது வடபகுதிக்கான இராணுவப் பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் ரோஹான் தளுவத்தவிற்கு அறிவிக்கக்கூட அவர் தவறிப்போய் இருந்தார். தாக்குதலின் சாத்தியம்பற்றிய முன்னெச்சரிக்கை எதுவும் படையினருக்கு தெரியப்படுத்தப்படாதமையினால் அவர்கள் கவனமற்று இருந்துள்ளனர்.

இராணுவத்தளபதியினால் சிபார்சுசெய்யப்பட்டமைக்கு இணங்க மூன்று அல்லது நான்கு அடுக்குகளில் பரிசோதனைகளை அடிக்கடி மேற்கொள்ளத் தவறிவிட்டதாக மேஜர் ஜெனரல் ரோஹான் தளுவத்தமீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இத்தகைய மேற்பார்வை முறையில் மேஜர் ஜெனரல் தளுவத்த படையினரின் கமாண்டர்கள், பிரிகேட் கமாண்டர்கள், பட்டாலியன் கமாண்டர்கள் என்போருக்கு ஊடாக பூநகரி படைத்தளம் குறித்து மேற்பார்வை செய்திருக்க வேண்டும். எனினும் இத்தகைய மேற்பார்வை எதுவும் மேற்கொள்ளப்பட

ணுவ புலனாய்வினரின் முன்னெச்சரிக்கை உதாசீனம் செய்யப்பட்டதால் வடபகுதி கட்டளைப்பீடத்தின் குறைபாடு புலனாகிறது. உதாரணமாக கேணல் சில்வாவின் பொறுப்பின் கீழ் இருந்த இலகு காலாட்படையினர் கட்டுப்பாட்டிலேயே டாங்கிகளும் இருந்தன. ஆனால் டாங்கிகளுக்கான தகவல் தொடர்பு 3ஆவது கஜபாகு பட்டாலியனுடன் இணைக்கப்பட்டிருந்தது. டாங்கிகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடு எதுவும்செய்யப்பட்டிருக்கவே இல்லை.

விசேடமான வாகனங்கள் மற்றும் விசேடமான ஆயுதங்கள் வைக்கப்பட்டிருக்கும் பகுதிகள் பதற்றம் மிகுந்தவையாக கருதப்பட்டு இரவும் பகலும் மாறிமாறிக் காவல் காக்கப்பட வேண்டும் என்று இராணுவத்தளபதி காலத்திற்குக்காலம்அறிவுறுத்தியிருப்பதாகவும் அறிய முடிகிறது. உடனடியாகப் பாவிக்க வேண்டிய தேவை இல்லாத நிலையில் அத்தகைய முக்கிய வாகனங்களின் அல்லது ஆயுதங்களின் முக்கிய பாகங்களைக் கழற்றி வேறாக வைத்திருத்தல் வேண்டும் என்று இராணுவத் தளபதி அறிவுறுத்தி இருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கதே.

எனினும் இத்தகைய அறிவுறுத்தல் எதுவும் ரி.55 ரக டாங்கிகளை பொறுத்தவரை கடைப்பிடிக்கப்படவே இல்லை. பூநகரியில் டாங்கிகள் தான் புலிகளிடம் முதலில் வீழ்ச்சி அடைந்தன. டாங்கிக்கான படையினர் அதனைச் சென்றடைவதற்கு இடையில் புலிகள் அதற்குள் ஊடுருவி இருந்ததைக் கண்டு படையினர் அதிர்ச்சி அடைந்தனர். எந்த விதமான எதிர்ப்பும் காட்டப்படாமலேயே டாங்கிகள் கைவிடப்பட வேண்டியதாயிற்று. இந்த அமளியில் டாங்கிக்கான படையினர் தமது சொந்த ஆயுதங்களை மட்டுமன்றி தகவல் தொடர்பு சாதனங்க

மத்தியிலும் உதாசீனப்படுத்தப்பட்டு வந்தது இராணுவ விசாரணைக் குழுவினால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பிரிகேடியர் பள்ளகலவின் முன்னெச்சரிக்கைகள் இராணுவ புலனாய்வுத் தகவலாக அலலாமல் படையினரை உசார்ப்படுத்தும் தந்திர

இந்த வகையில் பூநகரி இராணுவ முகாமிற்கான பாதுகாப்பு என்பது பாதுகாப்புத் துறையின் அடிப்படைக் கொள்கைகளுக்கு அமைவாக அமைக்கப்படடிருக்க வில்லை என்ற முடிவுக்கே இராணுவ விசாரணைக்குழு வந்துள்ளது.

நன்றி; ஐலன்ட்

## தேர்தலில் கடமையாற்ற சிங்கள அதிகாரிகள் அச்சம்

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தல்களின்போது வவுனியா மற்றும் கிழக்கில் தேர்தல் உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றத் தென்பகுதியில் உள்ள அரச உத்தியோகத்தர்கள் அச்சம் தெரிவிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகள் நடமாட்டம் உள்ள பகுதிகளில் கடமையாற்ற அதிகாரிகள் அஞ்சுவதுடன் பூநகரி முகாமைத் தாக்கி அழித்த புலிகள் தேர்தலின் போது, தேர்தல் நடக்கும் இடங்களில் தாக்குதல் நடத்த மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? வேட்பாளர்களுக்கும், தேர்தல் அதிகாரிகளுக்கும் வழங்கப்படவுள்ள பாதுகாப்பை இனிமேல் தான் பார்க்க வேண்டும்எனபிரபாத்சகபந்து ஐலன்ட் பத்திரிகையில் எழுதியுள்ளார்.

## யுத்தத்தால் காணும் தீர்வு நிரந்தரமாகபேணமுடியாது

- ஜெகத் பெரேரா

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு 'பிரச்சினைக்கு யுத்தத்தினால் தீர்வு காண்பதானால் அதனை எப்போதும் நடைமுறைப்படுத்த முடியாது என்பதை இன்று முழுநாடும் ஏற்றுக் கொண்டுளளது. இவ்வாறு ஜெகத் பெரேரா கூறியுள்ளார். அவர் சிலுமின பத்திரிகைக்கு கருத்து வெளியிடுகையில் மேலும் சென்ற சில தினங்களுக்கு முன்பு இராணுவ உயர் அதிகாரினய நான் சந்தித்த போது அவர் 'வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு யுத்தத்தினால் தீர்வு காண முடியாது என்றும், அரசியல் தீர்வு காண முடியும்' என்றும் தெரிவித்தார். அரசியல் தீர்வுக்கு ஒவ்வொரு கடசியும் தீர்வை வெளிப்படுத்த வேண்டும். ஆனால் இன்று கட்சிகள் அதனைச் செய்யத்தவறிவிட்டன. அரசியல் கட்சிகள் இதனைச் செய்யத்தவறி வருவதால் யுத்தத்திற்கான தீர்வு ஒவ்வொரு நாளும் பின்நோக்கி தள்ளப்பட்டுக் கொண்டேயிருக்கிறது என்றும் தெரிவித்தார்.

## அளவான நீர்ப்பாசனம் அருமையான சிம்மாசனம்

# விசேட திறமையுள்ள மாணவரை பாராட்ட கல்வி அமைச்சு முடிவு

(கொழும்பு)

விசேட திறமையுள்ள பாடசாலை மாணவர்களைப் பாராட்டக் கல்வி மற்றும் கலாசார அமைச்சு தீர்மானித்துள்ளது. பாடத்திட்டத்தோடு இணைந்த பாடசாலை முயற்சிகளில் விசேட திறமையுள்ள மாணவர்களைப் பெற்றோர் மற்றும் நலம் விரும்பிகள் முன் பாராட்டுவதன் மூலம் அவர்களை ஊக்குவித்தல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இதற்கான ஆரம்ப வைபவத்தில், 1991-92 காலப்பகுதியில் விசேட திறமையைக் காட்டிய மாணவர்களும், அவர்களை வழிநடத்திய ஆசிரியர்களுக்கும் பாராட்டும், பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. இது குறித்த செய்திக் குறிப்பொன்றைக் கல்வி மற்றும் கலாசார அமைச்சு வெளியிட்டுள்ளது.

தகைமையுள்ள மாணவர்களின் துறைசார் விசேட திறன்களை அனுப்பி வைக்குமாறு அமைச்சு பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளது.

## சந்திக்கவும்

தற்போது கொழும்புத் துறைமுகத்தில்தனியார் வர்த்தகர்களுக்கு பொருள்களை ஏற்றிக்கொண்டிருக்கும் வாதுவ கப்பலில் பொருள்களை பருத்தித்துறையில்பெற்றுக் கொள்ளும் வர்த்தகர்கள் உரியஆவணங்களுடன் நாளை வெள்ளிக்கிழமை மு. ப. 10.00மணிக்கு 154, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள புனர்வாழ்வுப்பிரிவு காரியாலயத்தில் திட்டப்பணிப்பாளரை சந்திக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

## பொது எழுதுவினைஞர் வினைத்திறமை பரீட்சை

(யாழ்ப்பாணம்)

அரசாங்க, மாகாண அரசாங்க சேவையின் பொது எழுதுநர் சேவையின் 11ஆம் வகுப்பின் 'அ' பிரிவிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண்தடைப் பரீட்சைக்கு விண்ணப்பிப்போர் இம்மாதம் 24ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என்று அரசாங்க எழுதுவினைஞர்சங்கம் கேட்டுள்ளது.

இவ் விண்ணப்பத்தை 'பரீட்சைஆணையாளர் மலே வீதி,கொழும்பு-2' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இப் பரீட்சைக்கு தோற்றுவதற்குதகுதியுடையவர்கள் அனைவரும் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். போதியளவு விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்தால் மாத்திரமே இப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

சென்றஆண்டு இப்பரீட்சை 18-09-1993 அன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. இப் பரீட்சை பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளிவந்த போதும் யாழ்ப்பாணத்தில் தபால் போக்குவரத்து தாமதம் காரணமாக இதுவரை யாழ்ப்பாணம் வரவில்லை.

11-06-1993 வர்த்தமானியைப்பார்த்து அதற்கு அமைய விண்ணப்பத்தை தயாரிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மாதிரி விண்ணப்பப்படிவம் தேவையானவர்கள் பதில் செயலாளர் - ஆ. வ. பாலசுப்ரமணியம், வேலணை பிரதேச செயலகம், சுபாஸ் கட்டடம், விக்ரோறியா றோட், யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும் என்று அரசாங்க எழுதுவினைஞர்சங்கம்கேட்டுள்ளது

## ராஜீவ் கொலை வழக்கு நேற்று சென்னையில் ஆரம்பம்

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலை வழக்கு நேற்று ஆரம்பமானது. 41பேர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. சென்னையில் நடைபெறும் இவ்விசாரணைக்கு பத்திரிகையாளர் எவரையும் அனுமதிக்கக் கூடாது என நீதிபதி சித்திக் உத்தரவிட்டுள்ளார்.

பூந்தமல்லி சிறையினுள் நடக்கும் இவ் வழக்கில் ஆஜராகும் வழக்கறிஞர்கள் செய்தியாளர்கள் எவருடனும் பேசக் கூடாது எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. குற்றஞ்சாட்டப்பட்ட விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் மற்றும் பொட்டம்மான் ஆகியோர் சமுகமளிக்காத நிலையில் இவ் விசாரணை நடைபெற்றுவருகிறது


### அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்

### வினாயகர் சித்திரத்தேர்

அம்பாள் ஆலயத்தில் வினாயகர் சித்திரத்தேர் உருவாக இறையருள் கூடி அதற்குரிய வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

தேருக்குரிய அன்பளிப்புகள் கொடுக்க விரும்பும் அடியார்கள் நேரடியாக ஆலயக் காரியாலயத்துடன் தொடர்புகொண்டு அதற்குரிய பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளவும்.

இதற்கு எந்தவொரு தனிநபரும் பணச்சேகரிப்புக்கு நியமிக்கவில்லை என்பதை தேவஸ்தானம் அன்புடன் அறியத்தருகின்றது.

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

சிரணி,
சண்டிலிப்பாய். தர்மகர்த்தா சபை
(7270)


## பொலிசாருக்குள்

முன்னணி அரணில் நடைபெற்ற இச்சம்பவத்திற்கு உள்மோதலே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## இராணுவ

## சான்று காட்டி பெறவும்

கோண்டாவில் வாகனப் பதிவுக் காரியாலயத்திற்கு முன்னால் மோதிரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு யாழ் மாவட்ட அரசியல் துறை செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் சான்றுகாட்டி பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இம்மோதிரத்தைக் கண்டெடுத்து அதிபர் மூலம் ஒப்படைத்த கோண்டாவில் இராமகிருஸ்ணாமகா வித்தியாலய மாணவர்களான ஆ. றீகன் (ஆண்டு 4), பூ. கிருஸ்ணபாலன் (ஆண்டு 6) ஆகியோரின் இச் செயற்பாடு முன்னுதாரணமானது. பாராட்டுக்கு உரியதென யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி தெரிவித்துள்ளார்.

# விடுதலைப் புலிகளுக்கு நிகராக இராணுவம் பலம் பெறவேண்டும்

## பூநகரியின் படிப்பினை இது - கலாநிதி உயன்கொட

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் இராணுவ பலத்திற்கு முகம் கொடுக்கக்கூடியநிலையிலும், எந்த நேரத்திலும் இவர்களை தோல்வியுறச்செய்வதிலும் தயாராக இருக்கவேண்டும் என்பதே பூநகரி இராணுவ முகாம் தகர்ப்பின் மூலம் பெறவேண்டிய படிப்பினையாகும் என்று கலாநிதி உயன்கொட கூறியுள்ளார்,

சிலுமின பத்திரிகைக்கு கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறுகையில், விடுதலைப் புலிகள் இராணுவத்தினருக்கு முகம் கொடுப்பதற்குரிய சக்தியையும், பலத்தையும் பெற்றுள்ளனர். வெளிநாடுகளிலிருந்து தேவையான உதவிகளையும், தகவல்களையும் அவர்கள் பெற்றுவருகின்றனர். பத்தாண்டுகளுக்கு மேலாக நடைபெறும் இந்த யுத்தத்தில் இராணுவம் இன்னமும் வெற்றிபெறமுடியாதுள்ளது. அதேவேளையில் இந்தப் பகுதிகளில் நடைபெறும் யுத்தத்திற்கான தீர்வு காணப்படவேண்டிய அவசியம் உணரப்படுகிறது.

பாராளுமன்றம் மூலமாக இந்த யுத்தத்திற்கு தீர்வு காண்பது முடியாத காரியம். யுத்தம் நிறுத்தப்படவேண்டும். சிங்களவர், தமிழர் அல்லது முஸ்லீம் அமைச்சர், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் எவரும்தமதுமுழுச்செயற்பாட்டையும் யுத்தத்தை நிறுத்துவதற்காக மேற்கொள்ளவேண்டும்.

இதில் நாங்கள் என்ன செய்யவேண்டும்? எங்கள் நாட்டிலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் சகல அமைப்புகளும் இது தொடர்பாக உடனடியான நடவடிக்கை எடுக்கும்படி பாராளுமன்றத்தை நிர்ப்பந்திக்கவேண்டும். இந்த யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தைக் காண்பது மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்களின் முக்கியமான கடமையாகும். எங்களுக்கு அண்மையிலுள்ள வெளிநாடுகள் பக்கம் நாம் கண்நோக்கிப் பார்ப்போமேயானால் இத்தகைய நிர்ப்பந்தங்கள் அந்த நாடுகளுக்கு ஏற்பட்டிருப்பதைக் காணலாம். இந்த யுத்தம் தொடர்ந்து நீடிக்குமானால் அது எமது மக்களுக்கு நல்லதல்ல.

## பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா கற்கைநெறி

### விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

தேசிய கல்வி நிறுவக ஆசிரியர் கல்வித் துறையினால் நடாத்தப்படும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறியின் 1994|95ஆம் கல்வி ஆண்டுகளுக்கான மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி கல்வி நெறிக்கு பட்டதாரி ஆசிரியர், பட்டதாரி ஆசிரிய பயிலுனர், பட்டத்தகைமையோடு கூடிய ஆசிரியர் சேவையிலுள்ளோர் ஆகியோர் அதிபருடாக தமது விண்ணப்பங்களை இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் சிரேஷ்ட விரிவுரையாளர் தேசிய கல்வி நிர்வாகம், யாழ். இந்துமகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும் அல்லது சனி, ஞாயிறு தினங்களில் நேரில் கையளிக்கலாம் எனவும் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் இதற்கான மாதிரி விண்ணப்பப்படிவங்களை கோட்டக் கல்வி அலுவலகங்களில் பார்வையிடலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (பா)

## அதிபர்கள் கூட்டம்

யாழ் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் எதிர் வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 2.00 மணிக்கு முகாமைத்துவ நிலையத்தில் நடைபெறவுள்ளது எனவும் பாடசாலைகளில் உடற்பயிற்சி பயிற்றுவிக்கும் ஆசிரியரையும் அழைத்து வருமாறும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவிக்கிறார்.

## உதைபந்தாட்டம்

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் வலய ரீதியில்

## நிவாரண முத்திரை

பருத்தித்துறை வந்தடைந்த "றுகுணு" கப்பலில் கொண்டு வரப்பட்ட இடம் பெயர்ந்தோருக்கான நிவாரண உலர் உணவு முத்திரைகள் தரம்பிரிக்கப்பட்டு பிரதேச செயலர்களுக்கு விநியோகிப்பதற்காக தயார் நிலையிலுள்ளன. எனவே, சகல பிரதேச செயலர்களும் 21-ம் திகதி வெள்ளிக்கிழமையிலிருந்து சனி, ஞாயிறு தவிர்ந்த வேலை நாட்களில் 154, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள புனர்வாழ்வுப் பிரிவிலிருந்து இம் முத்திரைகளைப் பெற்று இடம்பெயர்ந்த மக்களுக்கு உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு திட்டப்பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார்.

## கொழும்பில் பரீட்சை

## புதிது புதிதாக மனித புதைகுழிகள் கண்டுபிடிப்பு

### சு. க. எம். பி. கூறுகிறார்

(கொழும்பு)

சூரியகந்த புதைகுழியைப் போன்ற மனிதப் புதைகுழிகள் செவனகல முகாமிலும், தெக்காகெலவிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனைச் சிறிலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தா ராஜபக்சா தெரிவித்துள்ளார்.

சூரியகந்த புதைகுழிக்கும் புதிதாக இரு இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழிகளுக்கும் தொடர்பிருக்கலாம் என்று தெரிவித்தஅவர் இது பாரதூரமான விடயம் என்றும் பகிரங்க விசாரணை அவசியம் என்றும் கூறினார்.

சூரியகந்த புதைகுழியில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகளில் 13எலும்புக்கூடுகள் எம்பிலிப்பிட்டிய பாடசாலையில் இருந்து கைது செய்யப்பட்ட மாணவர்களுடையன என்பதற்குச் சாட்சியங்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை புதிய புதைகுழிகளைப்பற்றித் தனக்கு ஒன்றும் தெரியாது என்று பொலிஸ்மா அதிபர் பிறாங் டி சில்வா மறுத்துள்ளார்.


### யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

வருடாந்தப் பொதுக் கூட்டமும் பழைய மாணவர் தினமும்

காலம்: 23-01-1994 ஞாயிற்றுக்கிழமை

நேரம்: காலை 8-30 மணி

சீரணி,
சண்டிலிப்பாய். தர்மகர்த்தா சபை
(7270)

## பிரிவுபசார விருந்தும் புகைப்படத் திரை நீக்கமும்

### பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி)

திகதி: 22-01-1994 சனிக்கிழமை
மாலை 6-00 மணி.

இடம்: மருத்துவபீடம், யாழ்ப்பாணம்.

இதில் பங்குபற்ற விரும்புவோர் மருத்துவபீடாதிபதியின் அலுவலகத்துடன் 21-01-94 வெள்ளிக்கிழமை பி. ப. 4.00 மணிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

மருத்துவபீடம், பீடாதிபதி
யாழ் பல்கலைக்கழகம்.
19-01-1994 (சி-8421)

## விலை குறைப்பு

22 - 01 - 94 சனிக்கிழமை தொடக்கம் நாவாந்துறை சந்தை மாட்டிறைச்சிக் கடையில் 1 k. g. இறைச்சி ரூபாய் 80/- வீதம் விற்கப்படும்.

தகவல்:

நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை
(7273) உரிமையாளர்கள்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

மோதலே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### இராணுவ

முயல்கிறோம். நாம் திட்டமிட்ட மூலோபாயத்தின் கீழ் அதை விரைவில் அடைவோம் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். சமாதான சூழ்நிலையை அடைய நாம் உறுதிகொண்டுள்ளோம். மற்றையவர்களிலும்விட படைவீரர்களுக்கே சமாதானம் தேவையாகவுள்ளது.

மனோநிலை நாம் தாக்குதல் நடத்தும்போது உயர்வாகும். மனஉறுதியை வளர்க்கும் தலைமைத்துவம் முக்கியமானதோர் விடயம். வடக்கு கிழக்கிற்கு திறமையானவர்கள் நியமிக்கப்படுவர்

இராணுவ நடவடிக்கைகள் குறித்த தவறான பத்திரிகை செய்திகள் மக்கள் மனங்களில் எம்மீது தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்திவிடும். பத்திரிகைகள் தேசிய நலனில் அக்கறைகொண்டிருக்கவேண்டும். பத்திரிகைகளின் தவறான தகவல்கள் படையினர் மனநிலையையும்பாதிக்கலாம்

இராணுவத்தைவிட்டு 12,000க்கும் மேற்பட்ட படையினர் தப்பியோடியிருக்கின்றனர். இவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படும். எனினும்இவர்கள்மீது சில ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம். அண்மைக்காலங்களில் இராணுவப் பொலிசாரால் இராணுவத்தைவிட்டு தப்பியோடியவர்களில் 200க்கும் அதிகமானோர் கைதாகியுள்ளனர் எனவும் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா அப் பேட்டியில் மேலும் தெரிவித்தார்.

### பலாலி

ருந்த வீடும் சேதமடைந்தது.

இதேவேளை ஏழாலை மத்தியைச்சேர்ந்த தேவதாஸ் கவாஸ்கர் (10) என்பவரும் காயமடைந்தார். பல வீடுகளும் சேதமடைந்தன.

(09) (11) (நி) (தி)

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் வலய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான மாவட்ட மட்ட உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்று மாலை 3. 00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடமைதானத்தில்சென். அன்ரனி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வை விளையாட்டுக்கழகம்மோதும்

### குழந்தைகள்

வரையுள்ள குழந்தைகளில் 12வீதத்தினரும், 2முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளில் 24 வீதத்தினரும் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### பாடசாலை

வுப் புள்ளி அட்டவணை பேணல் (பகுப்பாய்வு), வகுப்பமைவு (மாணவர் எண்ணிக்கை), வரவு செலவுத் திட்டம், புள்ளி விபரம் (கிடைப்படம் பேணல்), பௌதிகச் சூழல் (சுத்தம், சுற்றாடல் வனப்பு), வருடாந்தக் கணக்கெடுப்பு, பதிவேடுகள் (பொருள்பதிவு, மூலப்பொருள்பதிவு), பா. அ. சபை, பழைய மாணவர் சங்கம், அடிப்படை வசதிகள், ஆசிரியர் வளம், உச்சப்பயன்பாடு, மாற்று ஏற்பாடு, பாடத் திட்டம், வேலைத்திட்டம், பாடக்குறிப்பு, பாடப்பதிவு, துணைச்சாதனம், பாடநூல், உபநூல், கருவி உபகரணங்கள், தொடர்மதிப்பீடு, ஆரம்பக் கல்வி, கனிட்ட தொ. நு. வாழ்க்கைத்திறன், ஆசிரியர் வரவு, லீவு, புகையிரத ஆணைச்சீட்டு, மன்றங்கள், நூலகம், ஒப்படை அப்பியாசம், சேவைக்காலப்பயிற்சி, அபிவிருத்தித்திட்டம், இணைபாடவிதான செயற்பாடுகள் ஆகியவையே இவையாகும். (ச, க)

## கொழும்பில் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

திறந்த மட்டுப்படுத்தப் பட்டகணக்காளர்களுக்கான பரீட்சை வரும் 22ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளதாக அரசாங்க அதிபர் கொழும்பிலிருந்து அனுப்பிய தகவலொன்று தெரிவிக்கின்றது.

### மனித

காலப்பகுதியை விட இந்த வழக்குகளின் எண்ணிக்கை அதிகமானது என்று சட்டத்துறை வட்டாரத்தினர் தெரிவிக்கின்றனர்.

1988/89 காலப்பகுதியில் தென் இலங்கையில் சுமார் 1,00,000பேர் காணாமற் போயுள்ளனர் என்று அதே வட்டாரத்தினர் தெரிவிக்கின்றனர். 1990ஜூன் மாதத்தில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமானது. பல சட்டத்தரணிகள் பயமுறுத்தப்பட்டதாலும், மேலும் சில சட்டத்தரணிகள் கொலை செய்யப்பட்டதாலும் கைதான பலர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

1992இல் காணாமற் போனவர்கள் மற்றும் சட்டவிரோதமாகக் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 503. அதேவேளை இக்காலப் பகுதியில் அடிப்படை மனித உரிமைகள்மீறல் வழக்குகள் 1012 தாக்கல் செய்யப்பட்டன.

வேறு குடியுரிமை மீறல்களும் சிறிலங்காவில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சுதந்திர நடமாட்டத்திற்குத் தடை மற்றும் தபால்களைத் திறத்தல் போன்ற குடியுரிமை மீறல்களை இல்லாமல் செய்வதற்கு குடியுரிமை அமைப்புகள் முயற்சிப்பதாகவும் கூறப்படுகிறது.

காலம்: 23-01-1994 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 8-30 மணி
இடம்: குமாரசுவாமி மண்டபம்

முன்னர் அறிவித்தவாறு பழைய மாணவர் தினம் 22-01-1994 அன்று நடைபெறமாட்டாது. இருநாள் நிகழ்ச்சிகளும் 23-01-1994 ஞாயிறு அன்று இடம்பெறும். சிரமத்திற்கு மன்னிக்கவும்.

### நிகழ்ச்சி

மு. ப. 8-30 மணி — சிவஞானவைரவர் ஆலயத்தில் வழிபாடு
,, 9-00 மணி — பழைய மாணவர் பாரியார் ஒன்றுகூடல்
,, 9-30 மணி — வருடாந்தப் பொதுக்கூட்டம்
,, 11-30 மணி — ஒன்றுகூடல்
பி. ப. 12-30 மணி — மதிய உணவு
,, 1-30 மணி — கலை நிகழ்ச்சிகள்
,, 4-00 மணி — அதிபரின் தேநீர் விருந்து

பாலசுப்பிரமணியம் தவபாலன்
19-01-94 செயலர்
(சி-8422)

## மரண அறிவித்தல்

### திருமதி பறுபதம் இரத்தினசபாபதி

திருநெல்வேலி

திருநெல்வேலி வடக்கு திருமதி பறுபதம் இரத்தினசபாபதி 19 - 01 - 94 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற M. C. இரத்தினசபாபதி (S. M. R.) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி சிவயோகம் இராசநாயகம், திருமதி புஷ்பரத்தினம் சதாசிவம், திரு. இ. ஜெயசீலன், காலஞ்சென்ற இ. சின்னப்பாபிள்ளை ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. சு. இராசநாயகம், திரு. க. சதாசிவம், திருமதி ஞானேஸ்வரி (இராணி) சின்னப்பாபிள்ளை, திருமதி பிரேமா ஜெயசீலன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (20 - 01 - 94 வியாழக்கிழமை) திருநெல்வேலி ஆடியபாதம் வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
(7274) க. சதாசிவம்